**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 158/2016**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.01.2026 | | |
| பெயர்: | கோபாலகிருஷ்ணன் (PW–1 Cross con) | தகப்பனார் பெயர்: | நாகப்பிள்ளை |
| கிராமம்: | திருவாலி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | வயது : | 69/2026 |

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 28.01.2026**</u>

**(ஆரம்பித்த நேரம்–16.02)**

1. எனது தகப்பனார் இறந்தபிறகு 7 மாதங்கள் கழித்து கரவோலை, நாகப்ப பிள்ளையின் வாரிசுகளுக்கிடையில் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் எனது பிராதை திருத்துவதற்கு முன்பு எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 8 செண்ட்டில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளார் என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிறகு எனக்கு ஒதுக்கப்பட்ட இடம் 17 ½ செண்ட் என்று பிராதை திருத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. அவ்வாறு திருத்தப்பட்ட பிராதிற்கு பிரதிவாதி மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 17 ½ செண்ட் எனக்கு சொந்தம் என்று நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் விளம்புகை பரிகாரம் கேட்காமல், தாவா பிராதை தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. தற்போது திருத்தப்பட்ட பிராதில் 17 ½ செண்ட்டை A அட்டவணை சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

3. A அட்டவணை சொத்திற்கு கீழ்புறம் B அட்டவணை சொத்தாகவும்,

மேல்புறம் C அட்டவணை சொத்தாகவும், பிராதில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். C அட்டவணை சொத்தில் தான் எனக்கு ஒதுக்கப்பட்ட ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்தை தான் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளார் என நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். B அட்டவணை சொத்து 9 ½ செண்ட் என கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு B அட்டவணை சொத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார் என்று இந்த வழக்கின் இடைக்கால மனுவில் நான் ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. IA.No.859/2017 in IA.No.737/2016 மனுவில் எனது சாட்சிய வாக்குமூலம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சிய வாக்குமூலத்தில் நான் கரவோலை ஏற்படவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. அதேபோல் எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் ஓட்டல் கடை நடைபெறுகிறது என்றும், மேற்படி சாட்சிய வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. திருத்தப்பட்ட பிராதில் B அட்டவணை சொத்தில் கிழக்கு பக்கத்தில் 2 குழி அளவிற்கு எனது தகப்பனார் நாகப்ப பிள்ளை சம்சுதீன் என்பவருக்கு டீக்கடை நடத்த வாடகைக்கு விட்டிருப்பதாக வா.சா.ஆ.12ல் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. சம்சுதீனுக்கு பிறகு இக்பால் என்பவர் 1982 முதல் 1986 வரை டீக்கடையை நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாடகையை எனது தகப்பனார் வாங்கி கொண்டதாக எனது சகோதரர் நாராயணசாமி வா.சா.ஆ.12ல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1986க்கு பிறகு அந்த டீக்கடையை மணி என்பவர் பிரதிவாதி தகப்பனார் நாராயணசாமி என்பவரிடம் வாடகைக்கு ஒப்புக்கொண்டு கடை நடத்திவந்தார் என்றால் சரியல்ல.

7. மணி என்பவர் வாடகை கடையை காலி செய்யாததால் அவரை வெளியேற்ற இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.153/1989 வழக்கை நாராயணசாமி,

கோவிந்தராஜ் மற்றும் நான் ஆகிய மூவரும் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எனது தகப்பனார் இறந்தபிறகு தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. கரவோலை ஏற்படவில்லை, வாய்மொழியாக தான் பாகம் பிரிக்கப்பட்டது, சரியான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் தான் நாங்கள் மூவரும் சேர்ந்து மேற்படி வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையில் நான்கெல்லையில், மூவருக்கும் சொந்தமான இடத்திற்கு கிழக்கில் உள்ள இடம் தான் டீக்கடை என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. தாவா B அட்டவணை சொத்து எனது தகப்பனார் நாகப்ப பிள்ளையிடம் தான் இருந்தது என்றாலும், வாய்மொழி பாகப்பிரிவினை என்பது எனது தகப்பனார் இருந்த காலத்திலேயே ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நாகப்ப பிள்ளையை நாராயணசாமி தான் கடைசி காலத்தில் பராமரித்து வந்தார் என்றும், அதனால் B அட்டவணை சொத்து நாராயணசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. நாராயணசாமிக்கு ஒதுக்கப்பட்ட B அட்டவணை சொத்து அவருக்கு பிறகு அவரது குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

10. B அட்டவணை சொத்தில் உள்ள கடை, கட்டிடத்திற்கு நாராயணசாமி பெயரில் வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், அவருக்கு பிறகு பிரதிவாதி பெயரில் வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 என்பது C அட்டவணை சொத்திற்கான வீட்டு வரி ரசீது என்றால் இல்லை, எனது இடத்திற்கு வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 உடன் புகார் செய்யப்பட்ட புகாரின் நகல் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.13 வரையிலானவை அ.வ.எண்.153/1989 வழக்கின் பிராது, எதிர்வழக்குரை, தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை என்றால்

சரிதான். மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் RS.No.385/23A பட்டாவானது நாகப்ப பிள்ளையின் பெயரில் தான் உள்ளது, எனது பெயரில் இல்லை என்றால் சரிதான்.

12. எனது தகப்பனார் பெயரிலான சொத்திற்கு நான் வசப்பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு சரியாக கணக்கிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு மூலம் சரியல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் இல்லை, திருவாலியில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. இதே சர்வே எண்ணில் தாவா சொத்தின் வடக்கு பக்கத்தில் வடபுறத்தில் உள்ள இடத்தை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான்.

13. எனது சகோதரர் மகன் பெரிய கடை கட்டிவிட்டதால் அதனால் பொறாமை கொண்டு, நான் பொய்யான காரணங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாய்மொழியாக எனக்கு ஒதுக்கப்பட்ட 8 செண்ட் இடத்திற்கு மேற்கு புறம் உள்ள எனது சகோதரர் கோவிந்தராஜூக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை அவர் ராமதாஸிடம் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

14. கோவிந்தராஜூக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் 2 குழியுடன் சேர்த்து விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் கோவிந்தராஜை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.50)**